பக்கங்கள் 13+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 14 திங்கட்கிழமை 27.01.2025 | அதிர்வு 179

## மட்டக்களப்பில் இன்று ஆணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மியான்குளம் காட்டுப் பாதையில் இன்று ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யோஷிதவுக்குப் பிணை!

## வெளிநாடு செல்லத் தடை விதிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷவைப் பிணையில் விடுவிப்பதற்குக் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நீண்ட பரிசீலனைக்குப் பின்னர் கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ், பெலியத்த பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷவை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு புதுக்கடை மேலதிக நீதிவான் உத்தரவிட்டிருந்தார். 03

# இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணி விவரங்களை வழங்குங்கள்

## பொதுமக்களிடம் வன்னி மாவட்ட எம்.பி. திலகநாதன் கோரிக்கை



(கி.வசந்தன்)

இராணுவம் மற்றும் கடற்படையின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணி விவரங்களை எம்மிடம் ஒப்படைத்தால் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் தெரிவித்தார். 03




# யாழ். பல்கலை. மாணவர் ஒன்றியம் தற்போது இயங்கு நிலையில் இல்லை!

## விசாரணை நடத்தக் கோருகிறார் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் தற்போது இயங்கு நிலையில் இல்லை. அது தொடர்பில் வெளிவரும் அறிக்கைகள் மற்றும் சமூக ஊடக கணக்குகளை பேணுவது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக் கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மனோகரன் சோமபாலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்த போதே இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்பது இயங்கு நிலையில் இல்லை என்பது உங்களுக்கு தெரியுமா?. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்துக்குச் செயலாளர் என்று எவரும் இல்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியத் தலைவருடைய கல்வியாண்டு பூர்த்தி செய்யப்பட்டு இருக்கின்றது. ஆகவே தலைவர், செயலாளர் இல்லாமல் எவ்வாறு ஒன்றியம் இயங்க முடியும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு ஒரு நிறைவேற்ற அதிகாரம் மிக்க தலைவர், செயலாளர் நியமிக்கப்படுவார்களேயனால் அது பீடங்களினுடைய மாணவர் ஒன்றியங்களில் இருந்து தான் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது.

தற்போது செயலாளராக தன்னை வெளிப்படுத்தும் நபருடைய நியமனமானது சட்ட விரோதம் என்ற அடிப்படையில் எங்கள் முறைப்பாட்டைத் துணைவேந்தருக்கு மாணவர் நலச் சேவை பிரிவினருக்கும் முன்வைத்துள்ளோம்.

முன்னர் இருந்த மாணவர் ஒன்றியச் செயலாளர் பதவி வெறிதாகியிருந்தது. அதன் பின்னர் தற்போதுள்ள ஒருவர் நியமிக்கப்பட்டார். அதில் எமக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

குறிப்பிட்ட திகதியில் முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினுடைய தலைவருக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டிருந்தது. எந்தவித கல்வி ரீதியான செயல்பாட்டிலும் அவர் ஈடுபட முடியாது.

ஆகவே ஒரு தலைவர் வகுப்பு தடையில் இருந்த நிலையில் எவ்வாறு அந்த பீடம் ஒரு முடிவை எடுத்து மாணவர் நல சேவை அலுவலகத்துக்கு அனுப்பி இருக்கமுடியும்.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உத்தியோக பூர்வ தகவல்கள் கலைப்பீட மாணவர் ஒன்றிய சிரேஷ்ட பொருளாளர் ஊடாகவும் பீடாதிபதி ஊடாகவும் மாணவர் நல சேவை கிளைக்கு அனுப்ப வேண்டும். ஆனால் அதனை விசாரித்த போது அவ்வாறான கடிதத்தை அனுப்பவில்லை என்றும் நியமனத்தை அனுப்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தங்கள் விருப்புகளை காட்டுவதற்காக ஒரு சிலருடைய திட்டமிடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த நிகழ்வு இடம்பெற்றது. அவரது நியமனம் ஒரு சட்டமுறையற்ற நியமனம். இதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்புச் சொல்ல வேண்டும் என மூன்று, நான்கு கடிதங்களை அனுப்பி இருந்த போதும் எவ்வித பதிலும் தரப்படவில்லை.

செயலாளருடைய கையெழுத்துக்கள் இல்லாத கடிதங்கள் செல்லுபடியற்றவை. மாணவர் ஒன்றியங்களைப் பொறுத்தவரை கூட்டங்களை கூட்டுவதற்கான அதிகாரம் செயலாளரிடம் இருக்கின்றது. செயலாளரின் பதவி வெறிதானால் உச்சபட்சமாக அதிகாரம் உள்ள நபர் கூட்டத்தை கூட்ட முடியும். தற்போது நடைபெறுகிறது சம்பவத்தின் படி செயலாளரில்லை. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பாக மாணவர் ஒன்றிய தலைவரின் பதவி வெறிதாகியுள்ளது. மூன்று நான்கு மாதங்களாக செயலாளரில்லை.

கலைப்பீட மாணவர்களை வழிநடத்தும் பொறுப்பு என்னுடையது. பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தை கண்காணிக்கின்ற அதிகாரம் குறித்தவொரு கட்டமைப்பு இருக்கிறது.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கடிதம் எழுதிக் களைத்துப்போய்விட்டோம். கலைப்பீடத்துக்கு வர வேண்டிய ஒரு சிறப்புரிமையைக் கேட்டு அலுத்து போய் விட்டோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான மாணவர் ஒன்றியம் இயங்கு நிலையில் இல்லாத நிலையில், அதன் உத்தியோக பூர்வ முகநூல் கணக்கை இயக்குபவர்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். – என்றார்.



# சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதி வடக்கு – கிழக்கில் எதிர்ப்புப் போராட்டம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் அழைப்பு




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியைக் கறுப்பு நாளாக நினைவுகூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் உலகுக்கு மட்டுமல்லாமல் அநுர அரசுக்கும் எடுத்துக் கூறுவதற்கு அணிதிரளுமாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இறுதி யுத்த காலப்பகுதியில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களின் சங்க உறுப்பினர்கள் இன்று யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

# வன்னியில் நாயைக் கொடூரமாக படுகொலை செய்த பெண் கைது!

முல்லைத்தீவு – மாங்குளம் பகுதியில் நாய் ஒன்றைக் கழுத்தை நெரித்து கொடூரமாகக் கொன்ற சம்பவம் தொடர்பாக பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கழுத்தில் கயிற்றால் கட்டப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்ட நாயின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானதைத் தொடர்ந்து, பலரும் இந்தச் சம்பவத்துக்குக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த மாங்குளம் பொலிஸார், சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்தனர்.

மேற்படி பெண் விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் மத்தியஸ்த குழு எடுத்த மனிதாபிமானமற்ற முடிவே இந்த நாய் கொல்லப்படுவதற்கு வழிவகுத்துள்ளது என்று சமூக வலைத்தளங்களில் கண்டனம் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மட்டக்களப்பில்...**

வட்டவான் பகுதியைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**இராணுவ....**

இந்த விடயம் தொடர்பில் அவர் இன்று ஊடகங்களிடம் மேலும்

கருத்துத் தெரிவிக்கையில்,

"கடந்த காலத்தில் இராணுவத்தினர் தமது தேவைக்காக வன்னிப் பிரதேசத்தில் கையகப்படுத்திய பிரதேசங்களைப் படிப்படியாக எமது அரசு விடுவித்து வருகின்றது. கடந்த காலங்களிலும் இவ்வாறான காணிகளை எமது அரசு விடுவித்து இருந்தது.

கடந்த வாரமும் இராணுவம் மற்றும் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து இருந்தது. எனவே, அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட இடங்கள் இருக்குமாக இருந்தால் அது தொடர்பான விபரங்களை எமக்கு தந்து உதவுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அவ்வாறான இடங்களை மிக விரைவில் விடுவித்து மக்களுடைய பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளோம்." – என்றார்.

**யோஷிதவுக்கு...**

அதன்படி, சிறைச்சாலை அதிகாரிகள் இன்று யோஷித ராஜபக்ஷவை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

அதற்கமைய, அவரை 50 மில்லியன் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிப்பதற்குக் கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டார்.

சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கு நீதிவான் தடை விதித்ததுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு இது குறித்து அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதன்படி, சந்தேகநபரை ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும், சாட்சியாளர்களுக்கு இடையூறு விளைவிப்பதைத் தவிர்க்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பதற்குப் போதுமான மற்றும் திருப்திகரமான ஆதாரங்களை மனுதாரர் தரப்பு சமர்ப்பிக்கத் தவறியதால், பிணைச் சட்டத்தின் விதிகளின்படி பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க அனுமதியளித்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆரம்பக் கல்வியில் சிரத்தை

சமீபத்திய தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

இந்தப் பரீட்சையில் அனைத்து மாணவர்களுக்கும் சர்ச்சைக்குரிய மூன்று வினாக்களுக்கும் இலவச புள்ளிகள் வழங்கப்பட்ட பின்னரும் கூட சித்திக்கான குறைந்தபட்ச பெறுபேறு எல்லை பத்து புள்ளிகளால் வீழ்ச்சியடைந்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இது இலங்கையின் ஆரம்பக்கல்வியின் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது என்று கூறுகின்றார்.

கொவிட் தொற்றுக் காலத்தின் போது, கல்வி அமைச்சின் அனைத்துக் கிளைகளுக்குமான கல்விப் பணிப்பாளர் திருமதி பத்ரா விதானகேயின் தலைமையில் ஒரு முக்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

'இலங்கையில் தரம் மூன்றில் படிக்கும் குழந்தைகளின் கல்வியறிவு மற்றும் கணிதத் திறமை பற்றிய அடித்தளத் திறன்கள் மற்றும் அத்தியாவசிய கற்றல் திறன் மதிப்பீட்டு அறிக்கை - 2023' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை, ஆக ஏழு சதவீதமான மாணவர்கள் மட்டுமே அத்தியாவசிய கற்றல் திறன்களைப் பெற்றுள்ளனர் என்பதை வெளிப்படுத்தியது.

அப்போது, தரம் 3 வகுப்பில் 332,231 மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். தேசிய ஆசிரியர் கவுன்ஸிலின் வழிகாட்டுதலின் கீழ், யுனிசெவ் ஆதரவுடன் நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பில், 9,590 மாணவர்கள் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். மக்கள் தொகை மற்றும் புள்ளியியல் துறையின் ஆலோசனையில் அந்தத் துறையைச் சேர்ந்த கலாநிதி தர்மவர்தனவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாதிரி தேர்வுக்கான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் குழந்தைகளுக்குப் பரிகாரக் கற்பித்தல் முறை அவசரமாகத் தேவை என்று ஸ்டாலின் கூறுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தத்தவறியமையே தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் பின்னடைவுக்கு காரணமாக அமைந்தது என அவர் வாதிடுகின்றார்.

இத்தகைய கடும் விமர்சன அறிக்கை வெளியான போதிலும், அதன் அவதானிப்புகள், கண்டுபிடிப்புகள் புறக்கணிக்கப்பட்டமையை விமர்சிக்கும் ஸ்டாலின், கல்வி முறை தொடர்ந்து மோசமடைந்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

இந் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தற்போதைய கல்வி அமைச்சரும் பொறுப்பேற்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் கற்பித்தல் முறைகளை செயல்படுத்துவதற்கு உதவ யுனிசெவ் கணிசமான ஆதரவை வழங்கியிருந்தாலும், இவ்விடயத்தில் கலதாரி ஹோட்டலில் ஒரு கூட்டம் மட்டுமே நடத்தப்பட்டது என்று ஸ்டாலின் எடுத்துரைத்தார்.

கல்வி அமைச்சு சமர்ப்பித்த அறிக்கையை புறக்கணித்ததன் விளைவுகள் தற்போது புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் தெளிவாகத் தெரிகின்றது என ஸ்டாலின் கூறுகின்றமையில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

ஆரம்பக் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களில் இருபது சதவீதத்திற்கும் அதிகமானோர் முறையான முதன்மைப் பயிற்சியின்றி உள்ளனர். இது மற்றொரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். இது பற்றியிம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.



# ஜனாதிபதி அநுர வடக்கு மாகாண விஜயத்தின்போது நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவார்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வடக்கு மாகாண விஜயத்தின்போது, இந்த மாகாண மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இதனைக் குறிப்பிட்டார்.

அதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனவும், அன்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் ஜனாதிபதி பங்கேற்பார் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


"வடக்கு மாகாண மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காகத் தேசிய மக்கள் சக்தியைத் தெரிவு செய்தமைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் அமைகின்றது.

இதேவேளை, கடந்த கால அரசாங்கங்கள் தேர்தல்களை பிற்போட்டிருந்தன. தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான சட்டதிருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது, நீதிமன்றங்களில் சில மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனினும், அவற்றினால் தேர்தலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என நம்புகின்றோம்.

அதேநேரம், ஏப்ரல் மாதத்தின் இரண்டாம் அல்லது நான்காம் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரரும் கலந்துகொண்டு கருத்துரைத்தார்.



# 34 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்!

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 34 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழகம் – இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 34 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்திருந்தனர்.

அவர்களையே எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, 34 மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பனை சார் உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

(த.சுபேசன்)

கூடிய விரைவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற பனை சார்ந்த உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடிப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு பனை சார் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது சமூகத்தில் தொழிலை வைத்து அந்தஸ்து பார்க்கும் நிலை காணப்படுகின்றது. ஆனால் செய்யும் தொழிலை வைத்து அந்தஸ்து பார்க்க முடியாது.

உயர்ந்த தொழிலில் இருக்கும் பலர் ஊழல் செய்து நாட்டுக்குத் துரோகம் செய்கின்றனர். ஆனால் சாதாரண தொழிலாளர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுகின்றனர். இவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள். கள் உற்பத்தியாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். விரைவில் எமது அமைச்சு ஊடாக அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்போம்.

நானும் ஓர் தோட்டத் தொழிலாளியின் மகன். எனது தாயார் தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழிலாளி. மலையகத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்ட நிலைமையை அனைவரும் அறிந்திருப்பார்கள்.

நான் கஷ்டத்தை உணர்ந்தவன். எனவே வடக்கு மாகாணகள் உற்பத்தியாளர்களுடைய பிரச்சினைகளை எனக்கு கூற வேண்டிய தேவை இல்லை. என்னால் உணர்ந்து கொள்ள முடியும்.

தென்னிலங்கையில் பனை மரங்கள் இல்லை. வடக்கு மாகாணத்தில் தான் அதிகம் காணப்படுகின்றன. இங்குள்ள பனை சார் உற்பத்தியாளர்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன்.- என்றார்.





# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கணனிப் பயிற்சி நெறி திட்டம்!

இன்றைய உலகில் அதிகமான குற்றச் செயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர். இத்தகைய குற்றவாளிகளைப் புனர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கும் மிக முக்கியமான பணியை யாழ்ப்பாணச் சிறைச்சாலை வழங்குகின்றது.

இங்கு சுமார் 700 இற்கும் அதிகமான கைதிகள் புனர்வாழ்வளிக்கப்படுகின்றனர். அதிக கைதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குத் தொழில் திறன்களும் தொழிலும் இல்லாது இருப்பது காரணமாக அமைகின்றமை ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் கைதிகளுக்கான தொழில் திறனை வழங்கி, தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து மீண்டும் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாது நற்பிரஜைகளாக சமூகத்தில் இணைக்கும் நோக்கில் சர்வதேச மருத்துவ நல அமைப்பினர் மற்றும் லண்டன் ரட்ணம் நிதியத்தினர் இணைந்து இவ்வாறான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

கைதிகளைப் புணர்வாழ்வளித்து குறிப்பாகக் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை இவர்கள் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இது கைதிகளுக்கான கணினிப் பயிற்சிநெறி ஆகும். இந் நிகழ்வின் பிரதம அதிதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பொருளாளர் முரளி இராமலிங்கம் நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நிகழ்விற்கு சிறைச்சாலை அட்தியட்சகர் இந்திரகுமார், நைற்றா முகாமையாளர் திருமுருகன், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவாகியது

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக எம்.ஜே.எம்.பைறூஸ் நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் நேற்று (26) காலை கூட்டுறவுச் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் தலைவரும், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஆதம் பாவா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது, கலந்து கொண்ட பொதுச்சபை உறுப்பினர்களால் ஒன்பது உறுப்பினர்கள் பணிப்பாளர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். எம்.ஜே.எம். பைறூஸ், ஏ.சீ.ரிசாத், நிசார், அஸ்வர் சாலி, எஸ்.எம்.அறூஸ், ஜலால்டீன், வாஹிட் உள்ளிட்ட இரண்டு பெண்களும் தெரிவாகியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்துடன் எம்.ஜே.எம்.பைறூஸ் அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஜலால்டீன் தெரிவானார்.

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக மூன்று தசாப்தத்திற்கு மேலாக கடமையாற்றி பெரும் அபிவிருத்திப் பணிகளைச் செய்த அதிபர் மர்ஹூம் ஏ.எம். ஜமால்டீனின் மூத்த புதல்வர் எம்.ஜே. எம்.பைறூஸ் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கூட்டுறவுச்ச சங்கத்தை ஆட்சி செய்தவர்கள் பல்வேறு ஊழல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்டு அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு கேரளக் கஞ்சாவையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல் அர்ஷத் பாடசாலைக்கு பின் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 36 வயதுடைய 40 வீட்டுத் திட்ட பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 1000 மில்லிகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்களான எம். நிரஞ்சன், ஜிஹான் உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பசுமலையிலுள்ள ரிக்ரொக் காதலியை தேடிச்சென்ற திருமலை இளைஞன் கைது!

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டம், அக்கரபத்தனை, பசுமலை பகுதியிலுள்ள பாடசாலை மாணவியான, ரிக்ரொக் காதலியின் வீட்டுக்கு சென்ற திருகோணமலை பகுதியைச் சேர்ந்த இளைஞன் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை (23) கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலை மாணவி தந்தையை இழந்தவர் எனவும், அவரின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்வதாகவும், சித்தப்பாவின் பராமரிப்பிலேயே இருந்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவியின் வீட்டுக்கு வந்த இந்த இளைஞனின் நடத்தை தொடர்பில் பிரதேச மக்களுக்கு சந்தேகம் ஏற்பட அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், இளைஞரிடம் விசாரித்துள்ளனர். அவரிடம் அடையாள அட்டை இருக்கவில்லை. தகவல் வழங்கலிலும் தடுமாற்றம் இருந்துள்ளது. அவரது நடத்தையில் சந்தேகம் ஏற்பட, அவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிவபூமி திருக்குறள் வளாகத்தின் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை!

யாழ்ப்பாணம், கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவபூமி திருக்குறள் வளாகத் திறப்பு விழா எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு ரா.மகாதேவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன், அண்ணாமலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமுறைக் கலாநிதி குமாரவயலூர் பாலச்சந்தர் ஓதுவார் ஆகியோர் கலந்து கொள்வர்.

வரவேற்புரையை சிவபூமி அறக்கட்டளை நிறுவன இணைச் செயலாளர் மகேசன் தயாகரன் வழங்குவார்.

ஆசியுரைகளை மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமணிய கோட்ட முதல்வர் தொண்டு நாதன் சுவாமிகள் அகியோர் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, கிழக்கிலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் அ.அற்புதராசா, யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தெல்லிப்பளை வலி வடக்கு பிரதேச செயலாளர் திருமதி சிவசங்கர் சுதீஸ்னர் ஆகியோர் நிகழ்த்துவர்.

சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளி விழா நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் சிவபூமி சிறப்புமலரை அதன் ஆசிரியர் பொறியியலாளர் ச.சந்தோஸ் வெளியிட்டு வைப்பார். திருக்குறள் உரைநூலை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அறிமுகம் செய்து வைப்பார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக சிவபூமி திருக்குறள் வளாகம் அமைப்பதற்கு உதவிபுரிந்த அன்பர்களான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் சொ. கமலாகரன் தம்பதிகள், அமெரிக்காவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் க கேதீஸ்வரன் தம்பதிகள் சொ கமலாகரன் தம்பதிகள்கேதீஸ்வரன் தம்பதிகள் லண்டன் கணக்காளர் க.பூபாலசிங்கம் தம்பதிகள், லண்டன் தொழிலதிபர் வி.யோகநாதன் தம்பதிகள், கொழும்பைச் சேர்ந்த செல்வி சியாமிளா புஸ்பநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.ஷ

சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் நன்றியுரையாற்றுவார்.

சிவபூமி திருக்குறள் வளாக சிறப்பு விழாவின் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக திருமுறைக் கலாநிதி குமாரவயலூர் பாலச்சந்தர் ஓதுவாரின் திருமுறை, திருக்குறள், கடவுள் வாழ்த்துகளுடன் ஆரம்பமாகும். வரவேற்புரையை சிவபூமி அறக்கட்டளையின் உபதலைவர் வைத்திய நிபுணர் நிபுணர் த.பேரானந்தராஜா வழங்குவார்.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், முல்லைத்தீவு அரச அதிபர் அருளானந்தம், உமா மகேஸ்வரன் கிளிநொச்சி அரச அதிபர் சுப்ரமணியம் முரளீதரன், மன்னார் அரச அதிபர் கனக சபாபதிகனகேஸ்வரன், யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கிருஸ்ணப்பிள்ளை விசாகரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தொடர்ந்து "திருக்குறளின் மேன்மை பெரிதும் வெளிப்படுவது" என்ற தலைப்பிலான பட்டிமன்றத்துக்கு யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி நடுவராகப் பணியாற்றுவார்.

இந்தப் பட்டிமன்றத்தில் அறத்திலே என்னும் தலைப்பில் நல்லையா விஜயசுந்தரம், குமரேசன் பாலஷண்முகன் சண்முகானந்தன் சந்தோஷன் ஆகிேயாரும் இன்பத்திலே என்னும் தலைப்பில் வேலாயுதம் சிவராஜா, இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, தெய்வேந்திரம் ஹர்சன் ஆகியோரும் பொருளிலே என்னும் தலைப்பில் சந்திரமௌசிகன் லலீசன், நடராஜா ஜங்கரன், ஜீவரட்ணராஜா ஜீவன் ஆகியோரும் வாதிடுவார்கள்.

வள்ளுவன் தன்னை உலகக்கே தந்து என்னும் தலைப்பிலான கவி அரங்குக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமை தாங்குவார். இந்தக் கவி அரங்கில் பா.மகாலிங்கசிவம், பேராசிரியர். ச.முகுந்தன், வேலணையூர் சுரேஸ்,இ.த.ஜெயசீலன், நா.சிவசிதம்பரம் ஆகியோர் கவி மழை பொழியவுள்ளனர்.

# மன்னார் சாந்திபுரம் பகுதியில் தீ விபத்தில் தீக்கிரையான வீடு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் சாந்திபுரம் பகுதியில் இன்று (27) காலை குடிசை வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக வீடு முற்றாக எரிந்து தீக்கிரையாகிய நிலையில் மக்களின் உதவியால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மன்னார் சாந்திபுரம் சிறுவர் பூங்காவுக்குப் பின் பகுதியில் திடீரெனத் தீ பரவல் ஏற்பட்ட நிலையில் இதனை அவதானித்த மக்கள் விரைவாகச் செய்யப்பட்டதன் அடிப்படையில் தீ பரவல் அருகில் உள்ள வீடுகளுக்கு பரவ முன்னதாக அணைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் மின்சார சபை, மன்னார் நகர சபையின் தீயணைப்பு வாகனம் உடனடியாக சம்பவ இடத்துக்கு வருகை தந்ததுடன் முழுமையாகத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



குறித்த தீ பரவல் காரணமாக எந்த ஒரு உயிர் சேதமும் ஏற்படவில்லை. எனினும் வீட்டில் காணப்பட்ட உடமைகள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின. மக்கள் ஒன்றிணைத்து செயற்பட்டதன் அடிப்படையில் பெரும் தீ விபத்தானது தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ரவிகரன் எம்.பியின் மக்கள் தொடர்பகம் புதுக்குடியிருப்பில் திறந்து வைப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகம் ஒன்று நேற்று முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு நகருக்கு அருகாமையில், புதுக்குடியிருப்பு – இரணைப்பாலை வீதியில் இது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பின் மூத்த கல்விமான்களில் ஒருவரான ஓய்வு நிலை அதிபர் சிவசாமி செல்வநாயகத்தால் மங்கல விளக்கேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

அதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மக்கள் தொடர்பகம் திறந்துவைக்கப்பட்டது. உத்தியோக பூர்வமாக அலுவலகச் செயற்பாடுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து கலந்துரையாடல்களும், மக்கள் குறைகேள் சந்திப்புகளும் இடம் பெற்றன.

இவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் புதுக்குடியிருப்பு மக்கள் தொடர்பகமானது வார நாள்களில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அராலி மக்களுக்கு நிவாரணம்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள அராலி மத்தி, அராலி தெற்கு கிராமங்களைச் சேர்ந்த, பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 29 குடும்பங்களுக்கு 116,000 ரூபா பெறுமதியா அத்தியவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

டான் ஊடகத்தின் கோரிக்கைக்கு அமைவாக உதவும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக, இந்த உதவி வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவியை வழங்கி வைத்தார்.




# ஊரெழு மீனாட்சி அம்மன் ஆலய தேர்த் திருவிழா நாளை!

■ அ. கனகசூரியர்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கிழக்கு பகுதியிலுள்ள கிராமங்களுள் ஒன்று ஊரெழு. கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட ஊரெழு கிராமம் மருதநிலப்பூமி. பச்சைப் பசேலென்று காட்சிதரும் பயிர்வகைகள் நிறைந்த பெரு நிலத்தின் மேற்குப் பகுதியில் எழில் மிகு திருக்கோலத்துடன் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவிலானது நூறாண்டு காலத்துக்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது.

இந்த ஆலயம் 1922 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. சிவஸ்ரீ அ.ச. துரைசாமி ஐயர், கண்ணகை அம்மனை மூல மூர்த்தியாகக் கொண்டு ஆலயத்தை ஸ்தாபித்தார். 1926ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் முதலாவது மகா கும்பாபிஷேகம் நடை பெற்றது. தொடர்ந்து வருடந்தோறும் பங்குனி மாதத் தில் அலங்கார உற்சவம் நடத்தப்பட்டு வந்தது.

ஆலயத்தை நிர்வகித்து வந்த சிவஸ்ரீ துரைசாமி ஐயர் 1957ஆம் ஆண்டில் காலமாகியதால், அவரது மருமகனான சிவஸ்ரீ மு. கிருஷ்ணசாமிக் குருக்கள் ஆலய நிர்வாகப் பொறுப்பையும் பூசை வழிபாட்டுக் கருமங்களையும் ஏற்றுக் கொண்டார். இதன் பின் இங்கு புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, 1961 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் இரண்டாவது தடவையாக மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து வருடாந்த அலங்கார உற்சவம் ஆவணி மாதத்து உத்தரம் நட்சத்திரத் தினத்தை ஆரம்பமாகக் கொண்டு நடை பெற்று வந்தது.

1974 ஆம் ஆண்டிலிருந்து அலங்கார உற்ச வத்துக்குப் பதிலாக கொடியேற்றம், தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்களை உள்ளடக்கியதாக மகோற் சவப் பெருவிழா இடம்பெற்று வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் வடக்கு வீதிக்குரிய விஸ்தீரணம் குறைவாக இருந்ததால், வடக்குப் பகுதியில் அமைந்திருந்த காணி அம்பாள் அடியார்களின் நிதியுதவியுடன் வாங்கப்பட்டு ஆலயத்துடன் இணைக் கப்பட்டது. அத்துடன், உள்வீதி, வெளிவீதி கொண்ட தாகவும் பரிவார மூர்த்திகளுக்கு உரிய கோயில்கள், வசந்த மண்டபம், யாக மண்டபம், வாகனசாலை மற்றும் பூந்தோட்டம் என்பவைகளை உள்ளடக் கியதாகவும் ஆலயம் வடிவமைக்கப்பட்டது. இந்த வகையில் பாரிய புனருத்தாரண வேலைகள் மேற் கொள்ளப்பட்டதால் 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதியன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

அது முதலாக கண்ணகை என வழங்கும் மீனாட்சி அம்மன், ஆலய கருவறையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அற்புதமான காட்சி அடியார்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

மீண்டும் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மகா கும்பா பிஷேகம் செய்யப்பட்டது.

அன்றைய காலப் பகுதியில் வடபகுதியில் நிலவிவந்த போர்ச் சூழ்நிலைகள் காரணமாக, ஆலயத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளால், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி மகா கும்பாபிஷேகம்



செய்யப்பட்டது. இதன்பின் ஆலய வருடாந்த மகோற் சவம், அபிராமிப்பட்டரின் அற்புத நிகழ்வை வெளிப்படுத்தும் தை மாதத்து அமாவாசை தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு, பதின்மூன்று தினங்கள் கொண்ட பெருவிழாவாக நடத்தப்பட்டு வருகிறது.

நித்திய பூசை வழிபாடுகள் காலையிலும் மாலையிலும் இடம்பெறுகின்றன. ஆலயத்தில் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வந்த புனரமைப்பு மற்றும் திருத்தப் பணிகள் காரண மாகஉருபவ் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மற்றுமொரு மகா கும்பாபிஷேகப் பெருவிழா இங்கு இடம்பெற்றது.


தனது மாமனாரின் மறைவுக்குப் பின் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்கள் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று காலமானார். இவரின் மறைவுக்குப் பின் இவரது புதல்வர்களான சிவஸ்ரீ பங்குஷக் குருக்கள், சிவஸ்ரீ சோதீஸ்வரக் குருக்கள் ஆகிய இருவரதும் பராமரிப்பில் ஆலய செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. ஆலயத்தின் நித்திய பூசை வழிபாட்டுக் கருமங்களை சிவஸ்ரீ சோதீஸ்வரக் குருக்கள் மேற்கொண்டு வருகி றார்.

இரதோற்சவத்தின்போது அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆரோகணித்து வீதிவலம் வரும் சித்திரத்தேர் 1980 ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டது. தேர்த் திருவிழா உபயகாரரான புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தஉருபவ் பிரபல தொழிலதிபராக விளங்கிய (அமரர்) கா. இளையதம்பி குடும்பத்தினரின் அன்பளிப்பாக சித்திரத்தேர் ஆலயத்துக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தில் 1973 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்த மகோற்சவத்தின் போது சமய அறிவுப் போட்டி நடத்தப்பட்டு வருவதும் ஒரு சிறப்பான நிகழ்வாகும். ஊரெழு கிராமத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகிறார்கள். இந்த சமய அறிவுப் போட்டி அறிமுகம் செய்யப்பட்டு 52 வருடங்கள் நிறைவு பெறுகின்றன என்பது மற்றுமொரு சிறப்புக்குரிய தகவலாகும்.

கடந்த 17ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய அருள்மிகு மீனாட்சி அம்மன் மகோற்சவப் பெருவிழாவில் நாளை (28) தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. வியாழக்கிழமை (30) பூங்காவன உற்சவத்துடன் இவ்வருட மகோற்சவ நிகழ்வுகள் நிறைவடையும்.





# சீனாவும் இந்தியாவும் பரஸ்பர புரிந்துணர்வுக்கு உறுதியளிக்க வேண்டும்: சீன அமைச்சர் வாங் யி

இரு நாடுகளும் ஒரே திசையில் செயல்பட வேண்டும், மேலும் கணிச மான நடவடிக்கைகளை ஆராய வேண்டும் மற்றும் பரஸ்பர புரிந்து ணர்வுக்கு உறுதியளிக்க வேண்டும் என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் யி இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் கூறினார்.

சீனாவும் இந்தியாவும் சந்தேகம் மற்றும் அன்னியம் என்பதற்குப் பதி லாக "பரஸ்பர ஆதரவு மற்றும் பரஸ் பர சாதனைக்கு" உறுதியளிக்க வேண் டும் என்று பீஜிங்கில் இன்று திங்கள் கிழமை நடந்த இரு அதிகாரிகளின் சந்திப்பின் போது வாங் யி கூறினார்.

கிழக்கு லடாக்கில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் (LAC) நீடித்த இராணுவ நிலைப்பாட்டின் காரண மாக இரு நாடுகளும் சிதைந்த இரு தரப்பு உறவுகளை சரிசெய்ய முற்படு கையில் மிஸ்ரியின் சீன விஜயம் ஒரு மாதத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது உயர் மட்ட ஈடுபாட்டைக் குறிக்கிறது.

கசானில் நடந்த பிரிக்ஸ் உச்சிமா நாட்டின் போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையே கடந்த ஆண்டு நடந்த சந்திப்பிலிருந்து ஏற்பட்ட முன்னேற்றம் உறவுகளை மேம்படுத்துவதற்கான அடித்தளமாக அமைந்துள்ளதாக வாங் யி இதன் போது மேற்கொள்ளிட்டு காட்டினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பீஜிங் கிற்கு விஜயம் மேற்கொண்ட மிஸ்ரி, சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறையின் தலைவர் லியு ஜியான்சாவோவைச் சந்தித்தார்.

சீன அரசு நடத்தும் குளோபல் டைம் ஸின் கூற்றுப்படி, இரு அதிகாரிகளும் தங்கள் தலைவர்களால் எட்டப்பட்ட ஒப்பந்தங்களைச் செயல்படுத்துதல், உரையாடல்களை மேம்படுத்துதல் மற்றும் சீனா-இந்திய உறவுகளில் ஸ்திரத்தன்மையை வளர்ப்பது குறித்து கருத்துக்களை இதன்போது பரிமாறிக் கொண்டனர்.

# உத்தரகாண்ட்டில் இன்று முதல் பொதுசிவில் சட்டம் நடைமுறை

இந்தியாவின் உத்தரகாண்ட்டில் பொதுசிவில் சட்டம் இன்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்தியாவில் மதத்தின் அடிப்படை யில் சிவில் சட்டங்கள் உள்ளன.

கடந்த ஆண்டு உத்தரகாண்ட் சட்டசபையில் பொதுசிவில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், உத்தரகாண்ட் மாநிலத்தில் இன்று முதல் பொதுசி வில் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.



திருமணம், விவாகரத்து, தத்தெ டுப்பு, சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு தனி நபர் உரிமைகள் தொடர்பாக அந்தந்த நபர்களின் மதத்திற்கு ஏற்ப சிவில் சட்டங்கள் அமைந்தன .

நாட்டில் உள்ள அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டு வர வேண்டும் என பல்வேறு தரப்பின ரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அதேபோல், பொது சிவில் சட்டத் திற்கு பலர் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் இன்று முதல் பொதுசிவில் சட்டம் அமுலுக்கு வந் துள்ளது.

# இந்திய மீனவர்களின் கைது விவகாரம்; ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் மீண்டும் கடிதம்

இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்துள்ள தமிழக மீனவர்கள் 34 பேரையும் விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தித் தமி ழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய் சங்கருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் நேற்று அதிகாலை இரணைத்தீவை அண்மித்த கடற்பகுதியில் கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்தனர்.

அவர்களுடன், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்ட மூன்று படகுகளும், கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இதனிடையே எதிர்வரும் 05ஆம் திகதி வரை இந்த மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பின்னணியில் தமிழக முதலமைச்சர் மீனவர் களை விடுவிக்க வலியுறுத்திக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இராஜதந்திர நடவடிக்கைகளை விரைவுபடுத்தி



மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் இதற்கு முன்னரும் மீனவர் விவகாரம் தொடர்பில் பல கடிதங்களை கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கு அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.



# தமது வாழ்விடங்களை நாடிச் செல்லும் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள்!

ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் மீண்டும் வடக்கு காசாவுக்கு சென் றுள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதல் காரணமாக இடம் பெயர்ந்திருந்த பலர் தற்போது வடக்கு காசா நோக்கி செல்கின்றனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து வடக்கு காசாவில் மீண் டும் குடியேறுவதற்கு பலரும் எதிர் பார்த்துள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.

எவ்வாறாயினும் கடந்த ஒரு வருடத்திற்கும் மேல் இடம்பெற்று வந்த போரினால் மக்களின் வாழ்விடங்கள், குடியிருப்புகள், உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







# கொலம்பியா மீது பொருளாதார தடை விதிப்பதற்கு அமெரிக்கா தீர்மானம்





நாடுகடத்தப்பட்ட ஏதிலிகளை ஏற்றிச் சென்ற இரண்டு அமெரிக்க இராணுவ விமானங்களை தரையிறக்குவதற்கு மறுத்ததையடுத்து கொலம்பியா மீதான வரிகளை 25 சதவீதத்தினால் அதிகரிப்பதுடன் பொருளாதாரத் தடைகளையும் விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவிற்குள் வரும் அனைத்து பொருட்களுக்கும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்போது காணப்படும் 25 சதவீத வரிகள் 50 சதவீதமாக உயர்த்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை, கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோவும் அமெரிக்கா மீது 50 சதவீத வரிகளை விதிப்பதாகக் கூறினார்.

அமெரிக்க இராணுவத்தின் நாடுகடத்தல் விமானங்கள் நுழைவதைத் தான் மறுத்ததாக குஸ்டாவோ பெட்ரோ நேற்று கூறினார்.

நமது சக குடிமக்களை குற்றவாளிகளைப் போல நடத்தாமல், பொதுமக்களை விமானங்களில் வரவேற்பேன் என்றும், புலம்பெயர்ந்தோரை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பக்கங்கள் 03

கனடா முரசு


திங்கட்கிழமை 27/01/2025

## கனடாவின் பிரபல ராப் இசைக்கலைஞர் கைது

கனடாவின் பிரபல ராப் இசை கலைஞர்களில் ஒருவரான ஹசன் அலி கைது செய்யப்பட்டுள்ளார்.

றொறன்ரோவை மையமாக கொண்டு இசை நிகழ்ச்

02▶




# தீ விபத்து சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழப்பு

**கனடாவில் இடம்பெற்ற தீ விபத்து சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.**

**ஹமில்டன் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.**

**இந்தத் தீ விபத்தில் இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

பியர் அப்பார்ட்மெண்ட்ஸ் என்ற கட்டடத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ விபத்தை கட்டுப்படுத்துவதற்கு சுமார் 60 தீயணைப்பு படையினர் பங்கேற்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

12 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் நான்கு பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.









# கனடாவில் வீதி விபத்தில் இந்தியர்கள் மூவர் பலி

கனடாவில் இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மூன்று இந்தியர்கள் பலியாகியுள்ளனர்.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்தவரான நவ்ப்ரீத் சிங் நவி என்பவர், ஒரு ஆண்டுக்கு முன், வேலை தேடி கனடாவுக்குச் சென்றுள்ளார்.

ஒன்ராறியோவுக்கு அருகே நவி வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது, அவரது வாகனம், எதிரே வந்த மற்றொரு வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நவியும், மற்ற வாகனத்தில் இருந்த அர்ஷ்தீப் சிங்கும், அவருடன் பயணித்த மற்றொரு நபரும் என மூன்று பேரும் உயிரிழந்துள்ளனர்.

அர்ஷ்தீப் மற்றும் அவருடன் பயணித்த மற்றொரு நபர் ஆகிய இருவரும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

உயிரிழந்த அந்த மூன்றாவது நபர் யார் என்பது அடையாளம் காணப்படவில்லை.

உயிரிழந்த மூன்று பேரின் உடல்களையும் இந்தியாவுக்குக் கொண்டுவர உதவுமாறு அவர்களுடைய குடும்பத்தினர் இந்திய அரசைக் கோரியுள்ளனர்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகளை நடத்தி வரும் ஹஸன் அலி “டாப் 5” என்ற பெயரில் மேடைகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்.

ஆயுதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றின் அடிப்படையில் ஹசன் அலியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் மார்க்கம் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் மேற்படி நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 29 வயதான யாசீன் அலி என்பவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹசன் அலி ஏற்கனவே கடந்த 2021 ஆம் ஆண்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

20 வயதான மாணவர் ஒருவருடைய கொலை தொடர்பில் இவ்வாறு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.






# ராபீஸ் தடுப்பு ஊசிகளுக்கு கனடாவில் தட்டுப்பாடு

கனடாவில் ராபிஸ் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்வதற்காக கூடுதல் எண்ணிக்கையில் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய சுகாதார முகவர் நிறுவனம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் ராபிஸ் தடுப்பூசிகள் விநியோகம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்த தடுப்பூசிகள் இறக்குமதி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர் வெறுப்பு நோயினால் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்த தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தடுப்பூசி பிரான்சில் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவிற்கு வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் கத்திக்குத்து சம்பவம்; ஆறு பேரை தேடும் பொலிஸ்

கத்தி குத்து சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஆறு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

காப்ரோ மால் வரும் பகுதியில் இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் ஆறு பேருக்கு தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவருக்கு உயர் ஆபத்து கிடையாது என பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவத்திற்கு என்ன காரணம் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. சந்தேக நபர்கள் பற்றிய எவ்வி தமான தகவல்களும் தற்போதைக்கு கிடையாது என டொரன்டோ பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.